# காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகம்

(மத்திய கல்வி அமைச்சகத்தின் நேரடி நிறுவனம்)

தேசிய தர மதிப்பீட்டுக்குழுவின் மறுமதிப்பீட்டில் (நான்காவது சுற்று) 'ஏ++' தகுதி பெற்றது

## காந்திகிராமம் - 624 302

05.10.2025

**ஒத்திகை : காலை 10.00 மணி** **பட்டமளிப்பு விழா : பிற்பகல் 02.00 மணி**

**பட்டம் பெறுவோர் கவனத்திற்கு**

அன்புடையீர்,

காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தின் 38–ஆவது பட்டமளிப்பு விழா எதிர்வரும் 2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 05–ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 02.00 மணிக்குப் பல்கலைக்கழகப் பல்நோக்கு அரங்கில் நடைபெற உள்ளது. இதில் தாங்கள் கலந்துகொண்டு பட்டத்தை நேரில் பெறுவதற்கு (in person) பதிந்துள்ளமையால் தங்களது வருகையை எதிர்நோக்குகிறோம். விழாவின்போது தாங்கள் பின்பற்ற வேண்டிய **நடைமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன.** இந்தச் சுற்றறிக்கையைத் தாங்கள் விழாவிற்கு வரும்பொழுது அவசியம் உடன் கொண்டுவருதல் வேண்டும்.

1. இந்தப் பட்டமளிப்பு விழாவில் நேரில் (in person) பட்டம் பெற விண்ணப்பித்தோர் மட்டுமே கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.
2. 2023-2024 மற்றும் 2024-2025–ஆம் கல்வியாண்டில் நடைபெற்ற இறுதித் தேர்வில் தேர்ச்சிபெற்றோர் மட்டுமே விழாவில் கலந்துகொள்ளமுடியும்.
3. **பட்டமளிப்பு விழா அன்று காலை 10 மணி அளவில் நடைபெறும் ஒத்திகையில் கட்டாயம் கலந்துகொள்ள வேண்டும். தவறினால் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்ள அனுமதி இல்லை.**
4. **பட்டமளிப்பு விழாவில் அணியும் சால்வையைத் தங்கள் துறைத்தலைவரிடமிருந்து 05.10.2025 அன்று காலை 09.30 மணி அளவில் பெற்றுக்கொள்ளலாம்.**
5. பல்கலைக்கழகப் பல்நோக்கு அரங்கில் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் நிகழ்ச்சி துவங்குவதற்கு ஒருமணி நேரம் முன்னதாகவே வந்து அமர வேண்டும்.
6. இருக்கையில் அமர்ந்த பின்னர் விழா முடியும்வரை அவையின் அமைதி, கண்ணியத்தைக் காப்பது மிகவும் அவசியம்.
7. அலைபேசியை அரங்கத்தினுள் கொண்டுவர அனுமதி இல்லை.
8. நிகழ்ச்சியின் இடையில் எழுந்து நிற்கவோ, வெளியில் செல்லவோ, புகைப்படம் எடுக்கவோ அனுமதி இல்லை.
9. பல்கலைக்கழக வேந்தர், பல்கலைக்கழக நிர்வாகக் குழுவினரும் புலத்தலைவர்களும் அரங்கிற்குள் வரும்பொழுது பட்டம் பெறுவோரும் பிற அழைப்பாளர்களும் எழுந்து நிற்கவேண்டும்.
10. பட்டமளிப்பு விழாவினைத் தொடங்கிவைக்கும் முகமாக, வேந்தர் பின்வருமாறு கூறுவார்.

    "This convocation of Gandhigram Rural Institute has been called to confer Degrees upon and issue Diplomas / Certificates to the candidates who passed the examinations held in 2023-2024 and 2024-2025 for this purpose and have been certified to be worthy of the same."

உ

11. பின்னர் "**அறிவாலயத்துள் வருக**" என்ற பல்கலைக்கழக வரவேற்புப் பாடல் பாடப்படும்.
12. துணைவேந்தரின் வரவேற்புரைக்குப் பின் கீழ்க்காணும் வரிசையில் பட்டம் பெறுவோர் வேந்தருக்கு அறிமுகப்படுத்தப்படுவர்.

    தாங்கள் பெறும் பட்டத்தினைக் குறிப்பிட்டுப் புலத்தலைவர்கள் (Deans) பின்வருமாறு அறிமுகப்படுத்துவர்.

    'Students please standup' என்று கூறியவுடன் மாணவர்கள் எழுந்து நிற்கவேண்டும். அப்பொழுது புலத்தலைவர்

    "I *have great pleasure in presenting before you the candidates who have passed the examination of the following programmes of this Institute"* என்று கூறுவார்.

    தொடர்ந்து 'Candidates Please be seated' என்று புலத்தலைவர் கூறிய பின்பு மாணவர்கள் அமர வேண்டும்.

13. ஒவ்வொரு தேர்வாளருக்கும் மேடையில் பட்டம் வழங்கப்பட்டு, புகைப்படம் எடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆகையால் அனைவரும் ஒழுக்கமும், மரியாதையையும் கடைபிடிக்க வேண்டும்.

| Sl. No. | Degrees/Diplomas/Certificates | Presenting Officers |
|---|---|---|
| 1. | Ph.D., D.Lit. (Literature) | Dr.P.Balasubramaniam<br>Dean, School of Sciences |
| 2. | MBA, M.Com., B.A., BBA, & B.Com. | Dr.B.Tamilmani<br>Dean, School of Management Studies |
| 3. | MCA, M.Tech. & B.Tech. | Dr.P.Kalavathi<br>Dean, School of Computer Science & Technologies |
| 4. | M.A., M.Phil. | Dr.K.S.Nakkeran<br>Dean, School of Social Sciences |
| 5. | M.Ed. & P.G.Diploma | Dr.S.Balasundari<br>Dean, School of English & Foreign Languages |
| 6. | M.Sc. | Dr.A.Balakrishnan<br>Dean, School of Health Science & Rural Development |
| 7. | B.Sc., & B.Sc. B.Ed | Dr.M.Sundaramari<br>Dean, School of Agriculture & Animal Sciences |
| 8. | B.Ed., B.Voc., D.Voc., Diploma, Advanced Diploma & Certificate | Dr.S.Shaji<br>Dean, School of Tamil & Indian Languages |

14. பட்டமளிப்பு

பட்டம் பெறுவோர் அனைவரும் எழுந்து நிற்கவேண்டும்

பட்டம் பெறுவோரிடம் வேந்தர் கீழ்க்காணுமாறு கூறுவார்:

"By virtue of the authority vested in me as the Chancellor of GRI, I confer on you and issue the Degree, Diploma and Certificate for which you have been declared eligible."

15. உறுதிமொழி எடுத்தல்

வேந்தர் "Let the candidates stand" என்று கூறும்பொழுது பட்டம் பெறுவோர் அனைவரும் எழுந்து நிற்கவேண்டும். தொடர்ந்து பின்வரும் வினாவை எழுப்புவார்:

Do you solemnly promise and declare that as holders of Degree/Diploma/Certificate it will be your utmost endeavour to prove yourselves worthy of this Institute

i) by promoting and supporting a casteless and classless society through non-violent means and

ii) by working for integrated rural development and for a social order conducive to the well-being of your fellow human beings?

பட்டம் பெறுவோர் "I do promise" என விடை அளிக்க வேண்டும்.

16. பல்கலைக்கழக வேந்தர் பட்டங்கள் / தங்கப் பதக்கங்களை வழங்குவார் (பதிவாளரும், புலத்தலைவர்களும் பெயர்ப் பட்டியலை அறிவிப்பர்).

17. பட்டங்கள் / பதக்கங்களை வழங்கிய பின்னர், வேந்தர் விழாப் பேருரை நிகழ்த்துவார்.

18. பட்டமளிப்பு விழாப் பேருரை முடிந்தவுடன் நிகழ்ச்சியின் நிறைவாக வேந்தர் "I dissolve the Convocation" என்று கூறுவார்.

19. நிறைவாக நாட்டுப்பண் பாடப்படும்.

20. பல்கலைக்கழக வேந்தர், துணைவேந்தர், நிர்வாக்குழு உறுப்பினர்கள், புலத்தலைவர்கள் அரங்கத்தை விட்டு வெளியே செல்லும்வரை அரங்கத்தில் உள்ள அனைவரும் எழுந்து நிற்கவேண்டும். விருந்தினர்கள் அவையை விட்டு வெளியேறிய பின்னரே, அவையில் உள்ளோர் கலைந்து செல்லுதல் வேண்டும்.

விழா நாளன்று தங்களுக்கும் தங்கள் பெற்றோர்களுக்கும் மதிய உணவு, விடுதி உணவகத்தில் பிற்பகல் 12.00 மணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காலை 10 மணிக்கு நடைபெறும் ஒத்திகைக்கும், பின்பு பிற்பகல் 01.15 மணிக்கு நடைபெறும் பட்டமளிப்பு விழாவிற்கும் தங்களின் வருகையை எதிர்நோக்குகிறோம். விழா இனிதே நடைபெற தங்களது ஒத்துழைப்பினைக் கோருகிறோம்.

**பதிவாளர் (பொறுப்பு)**
காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகம்
காந்திகிராமம்